உத்தரவிடலாம். ஆனால் தேவையான மருத்துவ சிகிச்சையை செய்துகொள்வதற்கு அவர்கள் பக்கத்திலேயிருக்கின்ற அந்த மருத்துவ மனைக்கு வரவேண்டும். டிரிப் போடுவதற்கு எல்லாம் அந்த மருத்துவ மனைக்கு வந்தால்தான் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே பரிசோதனைக்காக வேண்டுமானால் அந்த மருத்துவ அதிகாரிகள் அங்கே வந்து பார்த்துச் செல்லலாம். ஆனால் அதிலே பயன் இருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே யாருக்கு எல்லாம் இந்த காய்ச்சல் பரவியிருக்கிறதோ, அவர்கள் அந்த மருத்துவ மனைக்கு வந்தால் தான் சரியாக இருக்கும். இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய டி.டி., ஜே.டி.-க்களுக்கு உடனடியாக தகவல் கொடுக்கப்பட்டு அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குளித்தலையில் சாக்கடை நீர்த்தேக்கத்தால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. அ. பாப்பா சுந்தரம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குளித்தலை பேரூராட்சியில் சாக்கடை நீர் தேங்கி இருப்பதால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விளக்கக் குறிப்பு ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

விளக்கக் குறிப்பு.

திருச்சி மாவட்டம், குளித்தலை பேரூராட்சிப் பகுதியில் குறைவன்கன்னாறு, பள்ளிவாசல் கண்ணாறு மற்றும் மச்ச வாய்க்கால், ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் உள்ளன.

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 ஏப்ரல் 24

2. மேற்கண்ட மூன்று பாசன வாய்க்கால்களில் பாசன தண்ணீருடன் சாக்கடை கழிவு நீரும் செல்லுகின்றது. சாக்கடை நீர் செல்லுவதால் வாய்க்காலின் இருகரைகளிலும் மண் சரிந்து வாய்க்காலை மூடிவிடுவதால் சாக்கடை நீர் தேங்கிவிடுகின்றது. துப்புரவு பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகின்றது. சாக்கடை நீரும், பாசன நீரும் சேர்ந்து விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிறது. சாக்கடை நீர் தேங்காமல் சீராக வடிவு செய்ய, மேற்கண்ட மூன்று வாய்க்கால்களுக்கு இருபுறமும் கருங்கல் சுவர் கட்டி, அடித்தளம் காங்கிரீட் அமைக்கப்பட வேண்டும். இதைத் தவிர சாக்கடை நீர் வடிவு செய்ய வேறு மார்க்கம் இல்லை. எனவே பாசன வாய்க்கால்களில் கழிவுநீர்கள் கலக்காமல் கழிவுநீர்ச் சாக்கடைகள் கட்டும் பணி குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக மேற்கொள்ள பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் பேரூராட்சிப் பணியாளர்களைக் கொண்டு கழிவுநீர் தேங்கியுள்ள பகுதிகளில் மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்படும். இதனால் கொசுத் தொல்லை ஓரளவு கட்டுப்பாட்டுடன் இருக்கும். குடிநீர்க் குழாய்களில் எந்த இடத்திலும் சாக்கடை நீர் கலக்கவில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கக் குறிப்பிலே பாசன வாய்க்காலோடு சாக்கடை நீரும் கலந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாசன வாய்க்காலில் இந்த சாக்கடை நீர் கலந்து இருப்பதால் பாசன வாய்க்கால் நகர மையங்களிலே செல்வதால் வாய்க்காலின் இரு கரைகளிலும் மண் அரித்து அந்த சாக்கடை தூர்ந்துவிடுகிறது. அந்த சாக்கடை நீர்தூர்ந்துவிடுகின்ற காரணத்தால் அந்தக் கண்மாய்களில் எல்லாம் நீர் நிரம்பி ஊருக்குள்ளே அந்த சாக்கடை நீரும், இந்த நீரும் புகுந்துவிடுகிறது. குறிப்பாக பள்ளிவாசல், சிங்காரத்தோப்பு என்கின்ற தெருக்களில் எல்லாம் சாக்கடை நீரும், இந்த நீரும் தேங்கி நிற்கிறது. அங்கே குடிதண்ணீருக்காக போடப்பட்டிருக்கின்ற போர் பைப்புகளில் கூட இந்த சாக்கடை நீர் தேங்கி விடுகின்ற காரணத்தால் குடிநீர் எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் ஒரு நல்ல சாக்கடை தனியாக அமைத்துக் கொடுப்பாரா அல்லது இந்த கண்மாய்களை சரிசெய்து கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகுதிருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குளித்தலை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அவ்வாறு நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்போது, நகர்ப்புற வளர்ச்சி நிதி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று இது போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இப்பகுதி

யிலுள்ள மூன்று பாசன வாய்க்கால்களுக்கு இருபுறமும் கருங்கல் சுவர் கட்டி, அடித்தளம் கான்கிரீட் அமைப்பதற்கான நடவடிக்கை எடுத்து, மேற்கூறிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியாக ஆக்குவதாகச் சொல்லி இருக்கிறார்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். அதற்காக எங்களது இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நகராட்சி அமைப்பிடம் மூன்று ஆண்டுகளாகவே இந்த சாக்கடை நீர் மிகவும் மோசமான நிலையில் தேங்கி அங்கே கொசுக்கள்—இப்போது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல்—மூலம் பன்றிகளிலிருந்து மூளைக் காய்ச்சல் ஏற்படுவதற்கு குளித்தலையில் வழிவகை இருக்கிறது. ஆகவே, நீர்தேங்காமல் உடனடியாக செய்து, ஸ்லம் போர்டு மூலமாக, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, அவர்கள் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ? நான் சென்ற ஆண்டிலே சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த காரணத்தினால், அன்று நான் கேட்டும், குளித்தலைக்குத் தராமல் அரசாணை எண் 104, நாள் : 21–1–1991-ன்கீழ் அங்கே லால்குடி பேரூராட்சிக்கு அந்த நிதியைத் தந்தார்களே தவிர, குளித்தலை பேரூராட்சிக்குத் தரவில்லை. ஆகவே, இந்த ஆணையின்படி இந்த ஆண்டிலாவது குளித்தலை பேரூராட்சிக்குத் தந்து உதவும்படி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைச் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரோடு கலந்து பேசி இதுபற்றி விரைவான நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு)